# முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்; காலதேச வர்த்தமானத்தின் விசுவரூபம்!




தமிழ்மொழியின் இலக்கண, இலக்கியத் துணிபுகளை (Literary Inferences) அடிப்படையாகக் கொண்டு தமிழ்ச் சங்கங்களின் காலத்தை, ஆய்வாளர்கள் அறுதியிட்டதில் முதல் சங்கம் காய்சின வழுதியால் 4000 ஆண்டுகளுக்கு முன் தோற்றுவிக்கப்பட்டதென்றும் 400-க்கும் மேற்பட்ட புலவர்கள் யாத்தளித்த இலக்கியங்களில் முதுநாரை, முதுகுருகு நூல்கள் மட்டுமே எஞ்சின என்றும் - அதனை அடுத்த 1000 ஆண்டுகளுக்கு பின் வந்த இரண்டாம் தமிழ்ச்சங்கம் வெண்டேர்செழியனால் நிறுவப்பட்டு அதில் இசை நுணுக்கம், தொல்காப்பியம் நூல்களை தவிர எஞ்சிய நூல்களை கடல் தின்றது என்றும் - 1, 2, 3 ஆம் நூற்றாண்டுகளில் எட்டுத் தொகை, பத்துப்பாட்டு, பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் மூன்றாம் தமிழ்ச்சங்க காலத்தில் வந்த தென்றும் பெருமிதம் கொள்வர்.

**இந்நூல்கள் தமிழ்மொழிக்கு வளம் சேர்க்கும் இலக்கியங்கள் என்றில்லாமல், தமிழின், தமிழரின் தொன்மையான நாகரிக, வரலாற்று, பண்பாட்டுக் கூறுகளை நமக்கு கொண்டு வந்து சேர்த்த பெரும் செல்வங்களாகவே அமைந்தன.**

இந்த இலக்கியச் செழுமைகளை தமது சொத்தாகக் கொண்ட தமிழும் தமிழினமும் தன் தொன்மையை பல்வேறு அகழ் வாராய்ச்சிகள் வாயிலாக வெளிப் படுத்திக் கொண்டே வந்திருக் கின்றது.

1850-களில் கால்டுவெல்லின் ‘ஒப்பிலக்கணம்’, தமிழின் தொன்மைகளுக்கு கட்டியங் கூறியதை தொடர்ந்து தமிழறிஞர்களான மறைமலை அடிகள், பெ.சுந்தரம், கா.சு. பிள்ளை, பூரண லிங்கம் பிள்ளை உள்ளிட்டோர் ஊட்டிய உரம் 1920 வரை தமிழுக் குத் தொடர்ந்தது என்றாலும், ஆன்மீகம் மொழிக்கு மூடுபனியாய் வந்து அதன் சமூகப் பரப்பை மறைத்தபோது ‘திராவிடம்’ தன் வெப்பம் கலந்த வேள்விகளால் மொழி யில், சமூகத்தில் கலந்து அரசியல் மாற்றமாய் வினையாற்றி இம்மண்ணில் மகத்துவம் பெற்றது.

தமக்கு நாட்டுப் பற்றோ, மொழிப் பற்றோ இல்லையென்று பிரகடனம் செய்து ‘மானுடப் பற்று’க் காகவே சிந்தித்த தந்தை பெரியார் **“தமிழ்மொழியில் சைவம் உள்ளிட்ட மதங்களையும் ஆரியத்தையும் பிரித்து விட்டால், நமக்குப் பழந்தமிழ் கிடைத்து விடும்”** என்று 1931ல் தன் வேட்கையை வெளிப்படுத்தினார்.

1962ல் நாடாளுமன்றத்தில் முழங்கிய அறிஞர் அண்ணா **“நான் திராவிட மரபினத்தை சார்ந்தவன் என்றும், அவ்வினம் இவ்வுலகிற்கு வழங்க தனித்த வேறுபட்ட திடமான சிந்தனைகளை நிறைய பெற்றுள்ளது”** என்றும் பெருமிதம் கொண்டார்.

பெரியார் பெற்றிருந்த ‘வேட்கையும்’, அண்ணா கொண்டிருந்த ‘பெருமிதமும்’ உருவாக்கம் பெற வேண்டும் எனும் உந்துதலோடு பயணித்த முத்தமிழறிஞர் கலைஞர் தமிழுக்கும் அதன் செழுமைக் கும் ஆற்றிய பணிகள் கால ஓட்டத் தில் கரைந்து விடாத சரித்திர பெட்டகங்கள்.

தமிழ்நாட்டை ஆண்ட சேர, சோழ, பாண்டிய மற்றும் பல்லவ மன்னர்கள் உள்ளிட்டோர் கண்ட தமிழ் நாட்டில் விளைந்த இலக்கியங்களை, வரலாற்றுத் தேடல் களை ஆவணப்படுத்த தமிழ்நாட்டு முதல்வராய் அவர் பதவி ஏற்று **“தமிழக வரலாற்று நூல்கள் தொகுப்புக்குழு”** என்ற ஒரு அமைப்பை ஏற்படுத்தி 600-க்கும் மேற்பட்ட தமிழ் நூல்களை பாடத்திட்டங்களுக்கும், பழந்தமிழ் ஆய்வுகளுக் கும் வழங்கி மொழி, இன, பண் பாட்டுக் கூறுகளை அரண் செய்து, அரசின் புழக்கத்திற்கு கொண்டு வந்தவர் முத்தமிழறிஞர் கலைஞரே.

திராவிடமொழி ஞாயிறு



**ஆ.இராசா, எம்.பி.**
துணைப் பொதுச் செயலாளர், தி.மு.க.

தேவநேய பாவாணர் அவர் களைக் கொண்டு **“செந்தமிழ் சொற் பிறப்பியல் அகர முதலி’**யை தமிழுக்குத் தந்தவரும் அவரே. ‘மொழியை முன்னிருத்தி இனத்தை மீட்பதும்; இனத்தை முன்னிருத்தி மொழியை காப்பதும்’ திராவிடத்தின் தத்துவ தளம் மட்டுமல்ல; தடமும் அதுவே! அந்தத் தடத்தில் தமிழர்களுக்கு வாய்த்த இன்னொரு வரம் **“முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்”** எனும் ‘திராவிட மாடல்’ ஆட்சி நாயகர்.

**“இந்திய துணைக் கண்டத்தின் வரலாறு இனி தமிழ்ப் பரப்பிலிருந்து தான் தொடங்கி எழுதப்பட வேண்டும் என்று சான்றுகளின் அடிப்படையில் அறிவியல் பூர்வமாக நிறுவுவதே நமது அரசின் தலையாய கடமை என்பதை இம்மா மன்றத்தின் மூலம் உலகிற்கு அறிவிப்பதில் நான் பெருமிதம் கொள்கிறேன்”** என்று கீழடியில் கிடைத்த அகழ்வாராய்ச்சித் தரவுகளை தமிழ் மொழிக்கும், இனத்திற்கும் கிடைத்த ‘உலக அங்கீகாரம்’ என்று கொண்டாடியவர் நம் முதல்வர்.

இப்போது தமிழர்கள் பயன்படுத் திய இரும்பின் காலத்தை வரையறுத்து தந்து 5,500 ஆண்டுகள் என்று உலகிற்கு ஓதி தமிழுக்கும் தமிழர்க்கும் ‘பிரபஞ்சப் பெருமை’யை பெற்றுத் தந்த பேராளுமையும் நம் முதல்வரே!

தமிழை, தமிழினத்தை தமிழர்களே புகழ்ந்து கொள்வதாய் புறவுலகம் எண்ணிடுமோ எனும் உறுத்துதலை புறந்தள்ளும் இந்த மானுடவியல் ஆய்வின் மகத்துவத்தை **“தமிழ், தமிழ் நிலம், தமிழ் நாடு குறித்து நாம் இதுவரை சொல்லி வந்ததெல்லாம் இலக்கியப் புனைவுகள் அல்ல; அரசியலுக்காகச் சொன்னவை அல்ல; எல்லாம் வரலாற்று ஆதாரங்கள். உலக அறிஞர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டவை என்று மெய்ப்பிக்க வேண்டிய கடமையை நம்முடைய ‘திராவிட மாடல்’ அரசு எடுத்துக் கொண்டுள்ளது! ஏற்றுக் கொண்டுள்ளது!**

**தமிழனின் பெருமையை தமிழினத்தின் தொன்மையை உலகம் அங்கீகரித்து ஏற்றுக்கொண்டதைச் சொல்லும் வரலாற்றுப் பெருமை மிக்க இந்த விழா, நாம் வாழும் காலத்தில், நான் ஆளும் காலத்தில் நடைபெறுவது என் வாழ்நாளில் கிடைத்திருக்கக்கூடிய பெருமை! பெருமையிலும் பெருமை! பெறுதற்கரிய பெருமை!”** என்றுரைத்து பேருவுவகை கொள்கிறார்.

4000 ஆண்டுகள் இலக்கியத் தரவுகள் கொண்ட மொழி ‘தமிழ்’ என்று காட்ட காய்சினவழுதியும், வெண்டேர் செழியனும் வந்து போனார்கள். அந்தப் பெருமிதத் தின் ‘காலக்கணக்கை’ ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் தள்ளி மூத்தக்குடியாம் தமிழினத்திற்கு புது அணிகலன் ஒன்றை பூட்டிய பெருமை **‘முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்’** எனும் மாமனிதரையே சாரும்.

காலம் சிலருக்கு மட்டுமே சில பெருமைகளை கொண்டு வந்து சேர்க்கிறது. முயற்சி - உழைப்பு - அர்ப்பணிப்பு இவையெல்லாம் ஒரு மனிதரை செழுமைப்படுத்தவும், சிகரப்படுத்தவும் கூடிய காரணிகள் என்பதில் எவருக்கும் இருவேறு கருத்திருக்க வாய்ப்பில்லை. ஆனால் அவை மட்டுமே ஒரு தலைவனை முழுமைப் படுத்தவும் முற்றுப்படுத்தவும் முடியாது என்பதுதான் அனுபவம் தரும் இயற்கை நெறி.

இறை நம்பிக்கையாளர்கள் அதை ‘விதி’ என்று தள்ளிவிடக் கூடும். பகுத்தறிவாளர்கள் ‘வாய்ப்புகளின் வரிசை’ என்று விட்டு விடக்கூடும். ஆனால், அவை கடவுளின் வரமோ காலத்தின் விதியோ அல்ல என்பது பொருள்முதல்வாதிகளின் முடிவு. இதையே பெரியார் “காலதேச வர்த்த மானம்’ என்பார்.

**நூற்றாண்டு கண்ட திராவிட இயக்கத்தின் நெடும் பயணத்தில் ‘முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்’ எனும் மாமனிதர் சிகரத்தின் உச்சி தொட்டு ஒளிர்வது காலதேச வர்த்தமானத்தின் விசுவரூபம் மட்டுமல்ல; நம் வாழ்நாளில் நமக்கு வாய்த்த பெரும் பேறுமாகும்!**

**72வது பிறந்த நாள் காணும் சிகரம் தொட்ட அந்தத் தலைவரை அவரின் படை வரிசையில் நின்று வாழ்த்துவோம்!**

**அவர் வாழ்க பல்லாண்டு!**